# எடப்பாடி பழனிசாமியுடன் மத்திய அரசு அதிகாரி சந்திப்பு

## வீட்டு வசதி திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதாக பாராட்டு

சென்னை, பிப்.14-

தமிழக முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமியை, மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் செயலாளர் துர்கா சங்கர் மிஸ்ரா சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று சந்தித்து பேசினார். அப்போது தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் ராஜீவ் ரஞ்சன், தமிழ்நாடு அரசு ஆலோசகர் க.சண்முகம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ஹர்மந்தர் சிங், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் டி.கார்த்திகேயன், சென்னை மெட்ரோ ரெயில் மேலாண்மை இயக்குனரும், முதன்மைச் செயலாளருமான பிரதீப் யாதவ், சிறப்பு முயற்சிகள் துறை முதன்மைச் செயலாளர் எம்.ஏ.சித்திக் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.